**தலைப்பு 416 - சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு - 2021**

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 20 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் இராஜாங்க அமைச்சு அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இராஜாங்க அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(இ), 1.6.3(ஆ), (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 மூலதன செலவினம்

நிதிக்கூற்றுக்களிற்குரிய மூலதன செலவினத்தை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 யூலை 06 இல் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 2,767,510 கிரயமான அலுவலக உபகரணங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை அல்லது நிதியல்லாத சொத்துகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட்ட அலுவலக உபகரணங்களை கணக்கீடு செய்து, நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் தொடர்ந்துவரும் மாத கணக்கு பொழிப்புக்கள் மூலம் அவற்றைச் சீர்செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இனிமேல் இதுபோன்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமைகள் தாபிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அமைச்சிற்குச் சொந்தமான 29 வாகனங்கள் தொடர்பான ரூபா 205,579,850 கிரயம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத் திகதியிலுள்ளவாறு அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கையும் அவற்றின் கிரயமும் முறையே 17 மற்றும் ரூபா 154,225,000 ஆக கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தன. | அமைச்சில் 29 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றில் 12 வாகனங்கள் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆகையால், அமைச்சிடம் பௌதீக ரீதியாக காணப்பட்ட 17 வாகனங்கள் தொடர்பான கிரயம் மாத்திரமே கொம்ப்ரோலர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | அமைச்சுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டியதுடன் பயன்படுத்தப்பட்ட போதிலும் சொந்தமாக காணப்படாத சொத்துக்களை தாமதமின்றி கையகப்படுத்துவதற்கும் கணக்குகளில் உள்ள சொத்துக்களின் உண்மையான நிலையை பிரதிபலிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டில் கணக்காய்வுக்குக் கிடைக்கப்பெற்ற வாகனங்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட ஒசுகொவி (Osugovi) செயற்திட்டத்திற்குச் சொந்தமான 48 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் அமைச்சுப் பதவியணியினர் பயன்படுத்திய 06 வாகனங்களின் கிரயங்கள், மீளாய்வாண்டிலும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கல்லை. மேலும், கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற வாகனங்களின் பட்டியலில் வாகனங்களின் கிரயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஓசுகோவி கம்மன செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மோட்டார் சைக்கிள்களை, ஆயுர்வேத திணைக்களம் மற்றும் ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம் என்பவற்றிற்கு எதிர்வரும் 03 மாதங்களில் முறையாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அமைச்சு மட்ட பதவியிணியனர் பயன்படுத்திய 06 வாகனங்கள் சுகாதார அமைச்சினால் கௌரவ. அமைச்சர் மற்றும் அமைச்சு மட்டப் பதவியணியினரிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த வாகனங்களின் உரிமைத்துவத்தை தெளிவுபடுத்துவதன் மூலம் அவற்றின் கிரயத்தை கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | அமைச்சின் கீழ் வருகின்ற ஹோமியோபதி மருத்துவமனையின் மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 1,568,360 தொகை செலவிடப்பட்டு சம்பந்தப்பட்ட செலவின விடயங்களிற்கு வரவு வைக்கப்பட்டது. எனினும் வைத்தியசாலையின் பெயர்ப் பலகைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 144,000 தொகை மாத்திரமே நிதியல்லாத சொத்துக்களாக கணக்கிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும், மீதமுள்ள ரூபா 1,424,360 தொகை நிதியல்லாத சொத்துக்களாக கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சின் மூலதனப் செலவின விடயங்களில் வரவு வைக்கப்பட்டுள்ள ரூபா 1,424,360 செலவினத்தை தொடர்ந்துவரும் மாதத்தில் நிதியல்லாத சொத்தாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக வகைப்படுத்துவதன் மூலம் செலவினங்கள் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டியதுடன் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியை சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காத அதேநேரம் ஏனைய சில ஆவணங்கள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்காதமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் இருப்புப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | அவை நாளதுவரையாக்கப்படும். | நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் இருப்புப் புத்தகங்கள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு முறையாக பேணப்படும். | நிதிப்பிரமாணம் 110 இல் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை ஒழுங்காக பரிசீலனை செய்யக்கூடிய முறையில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடான்று பேணப்பட வேண்டும். |

1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக கண்காணிப்பதற்கு காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்5ாரள் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கு அவ்வப்போது மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன, அதன் பிரகாரம் அத்தகைய முறைமையினை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) மற்றும் 38(2) ஆம் பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவை தொடர்பாக உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை |

| | | |
|---|---|---|
| தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான மாற்றங்கள் செய்யப்படும். | அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு அக்கபூர்வமான நடைமுறையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் குறித்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வை முறையாக மேற்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடைமுறையொன்று தாபிக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(ஊ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 04 செலவின விடயங்களிற்குரிய ரூபா 3,650,000 நிதியேற்பாடு முழுவதும் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டத்தின் தேறிய விளைவு மாற்றப்படுவதில்லை. ஆகையால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இராஜாங்க அமைச்சின் தூரநோக்கு மற்றும் பணிக்கூற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை கருத்தில் கொண்டு சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சரின் அலுவலகத்தில் பழைய உபகரணங்கள் காணப்படாத போதிலும், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பராமரிப்பதற்காக ரூபா 850,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக அதில் 71 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 600,000 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் அமைச்சரின் வாகனங்களை பராமரிப்பதற்கான செலவினங்களிற்காக மாற்றப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) இல் உள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 02 மீண்டெழும் செலவின விடயங்களிற்குரிய ரூபா 103,264 சேமிப்பை விஞ்சி ரூபா 212,290 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. | 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு பொறுப்புகளைத் தீர்ப்பதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. ஆகையால் பொறுப்புகள் நிதியேற்பாட்டின் சேமிப்புக்களை விஞ்சி ஏற்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் சுட்டிக்காட்டியவாறு தொடர்ந்துவரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 05 மீண்டெழும் செலவின விடயங்களிற்குரிய ரூபா 169,833 பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்ததன் பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 05 செலவின விடயங்களிற்குரிய உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான பிழைகளை தவிர்ப்பதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்தி குறைபாடுகளை மேலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து பொறுப்புக்களும் பரிசீலணை செய்யப்பட்டு தொடர்புடைய கணக்குகளில் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் பேணப்பட வேண்டும். |

2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதும் 02 முதல் 03 வருடங்கள் மற்றும் 03 முதல் 04 வருடங்கள் வரையான காலப்பகுதிகள் கடந்திருந்ததுமான முறையே ரூபா 171,975 மற்றும் ரூபா 121,120 உள்ளடங்கிய ரூபா 293,095 கூட்டுமொத்த தொகை 2021 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சேவையில் இருந்து விலகிய இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் அவர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

2.4 வங்கி கணக்குகளின் செயற்பாடு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 1,901,229 கூட்டுமொத்தமான 07 காசோலைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகளாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அக் காசோலைகள் 2022 ஏப்ரல் 08 வரையிலும் வழங்கப்படாமல் கையில் காணப்பட்டன. | 2021 திசெம்பர் 31 இற்கு முன்னர் வழங்கப்பட்ட போதிலும் 2022 ஏப்ரல் 08 அளவில் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகளின் பெறுமதி ரூபா 1,625,747 கூட்டுமொத்தமானதுடன் அதற்கான நடவடிக்கைகள் 2022 மே 25 அளவில் எடுக்கப்பட்டுள்ளன. | வழங்கப்பட்ட காசோலைகளை கையில் வைத்திருப்பதற்கு பதிலாக பணம் பெறுபவருக்கு தாமதமின்றி அனுப்புதல் வேண்டும். காசோலைகளைப் பயன்படுத்துவது தொடர்பான சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாடுகள் ஆற்றப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திற்குள் டீசல் ஜெனரேட்டர் மற்றும் புதிய மின்சார விநியோக முறைமையை நிறுவுவதற்காக இராஜாங்க அமைச்சு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 5,000,000 மற்றும் | ஜெனரேட்டரை கொள்வனவு செய்வதற்கு வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு பெறுமகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கான நாணயக் கடிதம் 2021 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டுள்ளது. எனினும் வழங்குநரால் ஜெனரேட்டர் | அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகளின் பயன்பாடு மற்றும் |

| | | |
|---|---|---|
| ரூபா 23,500,000 தொகையை குறித்த கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய போதிலும் தொடர்புடைய பணம் 2022 ஏப்ரல் 30 வரையிலும் பயன்படுத்தப்படாமல் நிலையான வைப்பொன்றில் கூட்டுத்தாபனத்தால் வைப்பிலிடப்பட்டுள்ளது. | வழங்கப்பட்டிருக்கவில்லை, மேலும் 2022 ஆம் ஆண்டில் மீண்டும் பெறுகை நடவடிக்கைகளைத் தொடங்குவதன் மூலம் மேலும் தொடரப்பட்டு முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திறன் குறித்து போதுமான பின்தொடர்தல் செயன்முறை மேற்கொள்ளப்பட வேண்டும். |

3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை முழுவதிலும் உள்ள 565 மடங்களில் உள்ள பிக்குகளுக்கு சுவதாரணி பராமரிப்பாளர் மருத்துவ சேவையை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தில், பராமரிப்பு பயிற்சியாளர்களாக நியமிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் பாரம்பரிய பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு ரூபா 2,900,000 செலவினத்தை மேற்கொண்டு மருந்துகளை எடுத்துச் செல்வதற்காக ஆயிரம் பயணப் பைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மடங்களின் எண்ணிக்கை தொடர்பாக நியமிக்கப்படக்கூடிய அதிகபட்ச பராமரிப்பு பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 565 ஆக உள்ளதால் 435 மேலதிக பயணப் பைகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,261,500 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இது பயனற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது. மேலும், 2022 ஏப்ரல் 08 வரையிலும் கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 105 பூர்வீக பயிற்சியாளர்களுக்கிடையே மாத்திரம் பயணப் பைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அத் திகதியிலுள்ளவாறு எண்ணூற்று தொண்ணூற்றைந்து பயணப் பைகள் எஞ்சியிருந்தன. ரூபா 223,300 தொகை களனி ரஜ மஹா விகாரையில் நடைபெற்ற பகிர்ந்தளித்தல் வைபவத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், 1,000 பயணப் பைகளை கொள்வனவு செய்து வழங்குதல் தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்கள் இருப்பு புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | சுவதாராணி பராமரிப்பாளர் மருத்துவ சேவை நிகழ்ச்சித்திட்டம் அனைத்து மாகாணங்களிலும் அமுல்ப்படுத்தப்படும், 58 பயிற்சியாளர்கள் பதிவு செய்யப்பட்டு வடமேல் மாகாணத்தில் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, 2022 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படும் அதே நேரத்தில் பைகள் வழங்கப்படும், நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தியோகபூர்வ அறிமுகப்படுத்தல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2021 திசெம்பர் 11 இல் நடாத்தப்பட்டிருந்தது, ஆயுர்வேத பாதுகாப்பு சபைகளின் பாரம்பரிய ஆயுர்வேத பயிற்சியாளர்கள், சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (ஆயுர்வேத பயிற்சியாளர்கள்) உள்ளடங்கலாக ஏறத்தாழ 200 பேர் பங்கேற்றிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான பொழுதுபோக்குச் செலவினங்களிற்காக ரூபா 221,300 தொகையும் 105 பயிற்சியாளர்களுக்கு ஒவ்வொன்றும் ரூபா 500 வீதம் ரூபா 52,000 பிரயாணச் செலவினங்களும் செலவிடப்பட்டிருந்தன. | ஒரு செயற்திட்டத்தைத் தொடங்குவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் அமுல்ப்படுத்தும் ஒவ்வொரு கட்டத்தினதும் திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகளிற்கு ஏற்ப கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 09 மாவட்டங்களின் ஆயுர்வேத பாதுகாப்பு சபைகளுக்கு நூலகப் புத்தகங்களை வழங்குவதற்காக ரூபா 255,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதில் 42 சதவீதத்தை கம்பஹா மாவட்டத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு குறித்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட பாதுகாப்பு சபைகளின் பிரதேச செயலாளர்களுக்கு நிதியேற்பாட்டை வழங்குவதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பட்டியல் அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது. ‘‘சுவதாரணி’’ சமூக பராமரிப்பாளர் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்ப செயற்திட்டத்தை கம்பஹா மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. கம்பஹா மாவட்டத்திலிருந்து அதிக பொதுமக்கள் கோரிக்கைகள் வருகின்றதுடன் இதற்கு முன்னர் கம்பஹா மாவட்டத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படாததைக் கருத்தில் கொண்டு அதிக சதவீதமானது அந்த மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது. | அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நாடளாவிய ரீதியில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சுகாதாரமான நாட்டு உணவுகளை பொதுமக்கள் மத்தியில் ஊக்குவித்தல் மற்றும் தொற்றாத நோய்களிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் போசாக்கான நாட்டு உணவுகளை விற்பனை செய்வதற்காக போஷண மந்திர வியாபார நிலையங்களை நாடளாவிய ரீதியில் நிறுவும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,800,000 மற்றும் ரூபா 5,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த இரண்டு வருடங்களில் ரூபா 1,676,763 மற்றும் ரூபா 4,848,633 ஆகிய தொகைகளை உள்ளடக்கிய ரூபா 6,525,396 கூட்டுமொத்த செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கம்பஹா மாவட்டத்திற்கு ரூபா 5,000,000 அல்லது 77 சதவீதமான செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2021 திசெம்பர் 31 அளவில் 35 போஷண மந்திர வியாபார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் செயற்பாடு மற்றும் அது தொடர்பான நோக்கங்களை அடைந்துகொள்ளுதல் தொடர்பாக அமைச்சு பின்தொடர் நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவில்லை. | ‘‘சுவதாரணி’’ சமூகப் பராமரிப்பாளர் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்ப செயற்திட்டத்தை கம்பஹா மாவட்டத்தில் அமுல்ப்படுத்துவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ‘‘சுவதாரணி’’ பராமரிப்பாளர் மருத்துவ சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் மேல் மாகாணத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்டத்திலிருந்து அதிக பொதுமக்கள் கோரிக்கைகள் வருகின்றன, அதிக சனத்தொகை மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறை காரணமாக உகந்த போஷாக்கு முறையிலிருந்து விலகியதன் விளைவாக பல்வேறு போஷாக்கு நிலைகள் பதிவாகியுள்ளன. இதன் விளைவாக கம்பஹா மாவட்டத்திற்கு அதிகமான போஷண மந்திர வியாபார நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளன, 35 போஷண மந்திர வியாபார | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | | நிலையங்கள் 2021 திசெம்பர் 31 அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த போஷன மந்திர வியாபார நிலையங்கள் மீதான பின்தொடர் நடவடிக்கை தொடர்பான கடிதங்கள் 2022 சனவரி 12 இல் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இராஜாங்க அமைச்சு அதன் வளங்களை முகாமை செய்ய வேண்டியதுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக இராஜாங்க அமைச்சினால் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு காணப்படுகின்ற இடைவெளிகள் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட வேண்டும். எனினும், அந்த இலக்குகள், விலகல்கள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய பல்வேறு துறைகளை இனங்காண்பதன் மூலம் அடையப்பட்ட நோக்கங்களின் அளவை இராஜாங்க அமைச்சு இனங்கண்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

5 நல்லாளுகை

5.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான கணக்காய்வாளர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த பதவிக்கு இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளது, உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இதுவரை நியமனம் வழங்கப்பட்டிருக்காததுடன் உள்ளக கணக்காய்வு தொடர்பான விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவராக 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

6. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இராஜாங்க அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 403 ஆக இருந்த போதிலும், அத் திகதியில் உள்ளவாறான உண்மையான பதவியணியினர் 345 ஆக இருந்தது. ஆகையால் உண்மையான பதவியணியினரில் 14 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை 58 ஆக இருந்தது. இதனால் குறித்த 58 வெற்றிடங்களால் இராஜாங்க அமைச்சின் செயலாற்றல் இலக்குகளை அடைந்துகொள்வது பாதிக்கப்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | அமைச்சில் உள்ள அனைத்து பதவிகளுக்குமான பதவியணியினர் பொது நிர்வாக அமைச்சால் இணைக்கப்பட்டுள்ளதால், 90 ஆக இருந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை தற்போது 58 ஆக குறைவடைந்துள்ளது. இதனால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு சில சந்தர்ப்பங்களில் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் இதுவரை உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் இலக்குகளை உகந்த அளவில் அடைந்துகொள்வவதற்குத் தேவையான மனித வளங்கள் குறித்து மீண்டும் ஒரு மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத தொழிலாளர் பதவியொன்றிற்கு 2010 ஒக்தோபர் முதல் ஊழியர் ஒருவர் நிரந்தர அடிப்படையில் ஓய்வூதியத்துடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த பதவி மீளாய்வாண்டிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பிரச்சினையை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி அனுமதி கோரப்பட்ட போதிலும், அதற்கான சாதகமான பதில் கிடைத்திருக்கவில்லை, குறித்த ஊழியரை பணி நிரந்தரம் செய்வதற்காக அமைச்சில் உள்ள வெற்றிடத்திற்கு அவரை இணைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டவிரோத ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படக்கூடாது. எதிர்காலத்தில் இவ்வாறான சட்டவிரோத நியமனங்களைத் தடுப்பதற்கு உரிய கட்டுப்பாட்டு முறைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இராஜாங்க அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்படாத அலுவலக உதவியாளர் ஒருவருக்கு 2021 மார்ச் முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் சுகாதார அமைச்சினால் செலுத்தப்பட்ட ரூபா 394,690 கூட்டுமொத்தமான சம்பளம் மற்றும் படிகள் இராஜாங்க | இந்த அமைச்சின் அமைச்சரின் அலுவலகத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்த ஊழியர் இந்த அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் இணைக்கப்பட்டுள்ளார், குறித்த தொகை சம்பளம் மற்றும் படிகளை | முறையான அங்கீகாரமின்றி முறையற்ற தீமானங்களின் அடிப்படையில் உத்தியோகத்தர்களை இணைத்தல் மற்றும் சம்பளத்தை மீள்நிரப்புதல் என்பன மேற்கொள்ளப்படக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சினால் மீள்நிரப்பு செய்யப்பட்டுள்ளன. | கொடுப்பனவு செய்வதற்காக மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த ஊழியர் மீண்டும் சுகாதார அமைச்சகத்திற்கு 2022 மே 18 இல் விடுவிக்கப்பட்டுள்ளார். | |
| (ஈ) | 2019 மே 15 முதல் நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் 2020 நவம்பர் 09 முதல் குறித்த பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்யாமல், ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இந்த அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் பதவியை பொது சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிவிசேட தரத்தில் (Supra Grade) உள்ள ஒரு பதவியாக அங்கீகரித்துள்ளதுடன் பொது சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிவிசேட தரத்தில் போதுமான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் இல்லாததால் ஒரு பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொது சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிவிசேட தரத்திலுள்ள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். | செயலாற்றல் இலக்குகளை உகந்த அளவில் அடைந்துகொள்வதற்குத் தேவையான மனித வளங்கள் குறித்து மீண்டும் ஒரு மீளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |